தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வனங்கள்—வனப்பகுதிகளில் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்க வசூல் செய்யப்படும் அனுமதிக் கட்டணம் ரத்து செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சுற்றுச்சூழல் (ம) வனத்(வனம் 13) துறை

அரசு ஆணை(நிலை) எண். 78 நாள் :08.08.2008

படிக்க:

1) அரசாணை நிலை எண்.47 நாள் 3.3.2000
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண். ஆர் 4/23546/2008 நாள் 28.4.08
3)முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண்.பி.எப்.25306/2008 நாள் 8.5.2008

---

ஆணை :

மாண்புமிகு அமைச்சர் (வனம்) அவர்கள் 2008–09 ஆம் ஆண்டிற்கான வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை அளித்தார்கள் :

"செம்மறியாடுகளுக்கு வனப்பகுதிகளில் மேய்ச்சலுக்காக வசூலிக்கப்பட்டு வந்த அனுமதி கட்டணம் 03.03.2000 தேதியிட்ட அரசாணையின்படி ரத்து செய்யப்பட்டது. 2008–09 ஆம் ஆண்டு முதல் மாடுகளுக்கும் வனப்பகுதிகளில் மேய்ச்சலுக்காக வசூல் செய்யப்படும் அனுமதிக் கட்டணம் முழுவதுமாக ரத்து செய்யப்படும் ".

2. மேற்கண்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தன்னுடைய அறிக்கையில், மேய்ச்சல் கட்டணம் வசூலிப்பதன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டு ஒன்றிற்கு ரூ. 3.54 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். வனப் பகுதிகளில் கால்நடைகளை மேய்க்க கட்டணம் வசூலிப்பதிலிருந்து ஏற்கனவே செம்மறியாடுகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது என்றும் அதைப்போன்று வனங்களுக்கு அருகில் வாழ்கின்ற மக்கள் அவர்தம் மாடுகளை மேய்ப்பதற்கும் இலவசமாக அனுமதிப்பதின் மூலம் அவர்களுக்கு துறையின் மீது நல்லெண்ணமும் மற்றும் வனத்தை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட

வழிவகை செய்யும். எனவே, ஆடுகளைப் போன்றே மாடுகளை வனங்களில் மேய்ப்பதற்கு வசூலிக்கப்படும் கட்டணங்களிலிருந்து விலக்களித்து அரசு ஆணை வழங்குமாறு கேட்டுள்ளார். மேலும், இவ்வாறு மேய்ச்சல் கட்டணம் வசூலிப்பதிலிருந்து விலக்களித்தாலும், தற்பொழுது நடைமுறையில் உள்ள உரிமம் பெறும் நடைமுறை ஆடுகள் மேய்ப்பதற்கு பெறுவது போன்றே தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மேலேபத்தி 1– இல் குறிப்பிடப்பட்ட மாண்புமிகு வனத்துறை அமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் வனப் பகுதிகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்படும் மாடுகளுக்கு தற்போது வசூல் செய்யப்படும் அனுமதிக் கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்யலாமென கருதி அதன்படி அரசு வனப்பகுதிகளில் மாடுகளுக்கு மேய்ச்சலுக்காக வசூலிக்கப்படும் அனுமதிக் கட்டணத்தை ரத்து செய்து ஆணையிடுகிறது. எனினும், மேய்ச்சலை அனுமதிக்க நடைமுறையில் உள்ள உரிமம் பெறும் வழக்கத்தை தொடர்ந்து நீட்டிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. சுந்தரதேவன்
முதன்மைச்செயலர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
சென்னை 15
அனைத்து வனப்பாதுகாவலர்கள்
மாவட்ட வன அலுவலர்கள்
(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மூலமாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

படி
முதலமைச்சர் அலுவலகம்
சென்னை 9
மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை– 9
வனத்துறையின் அனைத்துப்பிரிவுகள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்